சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 298/2009

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் Pw3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 13.11.2024

Pw3 (சின்னசாமி )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**4,5,7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை விவரங்கள் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதி தாக்கல செய்துள்ள சாட்சி பிரமாண பத்திரிக்கையில் என்ன சொல்லியுள்ளார் என்று படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வாதி தனது பிராதிலோ சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலோ என்னை பற்றி சொல்லவில்லை என்றால் என்னிடம் அவர் சொன்னார். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கவுண்டச்சிபாளையத்தில் குடியிருக்கிறேன். எந்த கவுண்டச்சிபாளையம் என்றால் துய்யம்பூந்துறை கவுண்டச்சிபாளையம். இந்த வழக்கின் பிரதிவாதி ஜேம்ஸ் எங்கு குடியிருந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும், வெள்ளோடு கவுண்டச்சிபாளையத்தில் தான் குடியிருந்தார். நான் குடியிருக்கும் துய்யம்பூந்துறை கவுண்டச்சிபாளையத்திற்கும் வெள்ளோடு கவுண்டச்சிபாளையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3-4 கி மீட்டர் தூரம் உள்ளது. என் பெயர் அழகேசன் என்றால் அழகேசன் என்பது கூப்பிடும் பெயர், ஆவணங்களில் உள்ள பெயர் சின்னசாமி ஆகும். என் பெயர் சின்னசாமி என்பதை காட்டவும், குடியிருக்கும் முகவரிக்கும் ஆவணம் எதுவும் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், ஆனால் என்னிடம் உள்ளது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் சின்ன சின்ன காடுகள் புரோக்கரேஜ் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். நான் விவசாயம் செய்வதற்கும், ரியல் எஸ்டேட் தொழில் செய்வதையும் காண்பிக்கும் ஆவணம்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. ரியல் எஸ்டேட் புரோக்ரேஜ் தொழில் செய்பவர்களுக்கான சங்கதில் நான் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. நானும், வாதியும், அவரின் கணவரும் பவர் ஏஜெண்ட்டும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. நாங்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கில் வாதிகளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிருஸ்துவ மதத்தை சார்ந்தவர்கள். 1,2 பிரதிவாதிகள் எப்போதிலிருந்து கிருஸ்துவ மதத்தை பின்பற்றி வருகிறார்கள் என்றால் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கிருஸ்துவ மதத்தை பின்பற்றுகிறார்கள், தாழ்ந்தப்பட்ட சமூத்தினர் அல்ல. அவர்கள் கிருஸ்துவ மதத்தை சர்ந்தவர்கள் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் அவர்கள் 30 வருடங்க்ளாக பழக்கம், அவர்கள் தொழுவதற்கு ஈரோட்டில் உள்ள சர்ச் க்கு செல்வார்கள். ஈரோட்டில் எந்த சர்ச் என்றால் எனக்கு தெரியாது. ஜேம்ஸ் ம் செல்வமணியும் எந்த பள்ளியில் வாத்தியாராக இருந்தார்கள் என்றால் அது தெரியாது, வாத்தியார் என்று மட்டும் தெரியும். 1,2 பிரதிவாதிகளை எவ்வாறு தெரியும் என்றால் வெள்ளோடு கவுண்டச்சிபாளையத்தில் என் உறவினர் டீ கடை வைத்துள்ளார் அங்கு அவர்களை பார்த்து பேசிய வகையில் பழக்கம். அந்த டீ கடை பெயர் தெரியுமா , அந்த கடை எங்கு உள்ளது என்றால் கவுண்டச்சி பாளையம் பாலத்தின் அருகில் உள்ளது, அவர் பெயர் தெரியவில்லை. மாப்பிள்ளை என்று கூப்பிடுவேன். ஜேம்ஸ் எப்போது ரிட்டயர்டு ஆனார் என்றால் அது எனக்கு தெரியாது. எப்போது எந்த மாதம் அவர் பூமியை விற்று கொடுக்கசொல்லி என்னை வந்த கேட்டார் என்றால் மாதம் நினைவில்லை, 2000 வருடத்தில் கேட்டார். எந்த இடத்தில் வைத்து கேட்டார் என்றால் டீ கடையில் வைத்து தான் கேட்டார், மனைவி சொத்து, மனைவி பெயர் சொல்வமணி என்று சொல்லி அதை விற்று தரும்படி கேட்டார். எப்போது கிரயம் செய்து கொடுத்தனர் என்றால் 2000 வருடத்தில் எக்ரிமேண்ட் போட்டார், 2003 ல் கிரயம் செய்து கொடுத்தார், வெளிநபர்களுக்கு கடன் திருப்ப கொடுக்க வேண்டியிருப்பதால் உடனடியாக கிரயம் எழுதமுடியாது என்று சொல்லி 3 வருடம் கால அவகாசம்

கேட்டு ஜேம்ஸ் 2003 ல் கிரயம எழுதி கொடுத்தார். அக்ரிமேண்ட் தொகை எவ்வளவு என்றால் ரூ.1,50,000/- அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது, ரூ.25000/- மீதம் இருந்தது. ரூ.1,50,000/- அட்வான்ஸ் கொடுப்பவர்களுக்கு ரூ.25000/- மீதம் வைக்கவேண்டிய அவசியமில்லை என்றும், கடனிற்காக தான் ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும், அதனால் தான் சொற்ப தொகை பாக்கி கிரயத் தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ாறல் சரியல்ல, 1,2 பிரதிவாதிகளுக்கு வெளியில் வேறு நபர்களிடம் பெற்ற கடன் இருப்பதால் உடனடியாக கிரயம எழுதினால் பிரச்சினை ஏற்படும் என்றும், அதனால் 3 வருடம் கழித்து கிரயம் எழுதிக் கொள்ளலாம் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதால் தான் அந்த கால அவகாசம் எழுதப்பட்டது, ஒப்பந்தம் கடனிற்காக செய்யப்பட்டதல்ல, பிரதிவாதிகள் சொத்தை விற்கும் எண்ணத்தில் தான் கிரயம் பேசி முடித்தார்கள். எக்ரிமேண்ட் யார் யாருக்கும் இடையே ஏற்பட்டது என்றால் சதாசிவம் மற்றும் செல்வமணி ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்டது, மறுநாளே பூசப்பன் பெயரில் அவரே செல்வமணி சார்பில் கிரயம் எழுதி கொடுக்க பவர் பத்திரம் எழுதி கொடுத்தார்கள். கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கு தெரியாமல் கிரயம் செய்துள்ளனர். எந்த இடத்தில் வைத்து செல்வியிடம் இந்த சொத்தை கிரயம் வாங்க சொல்லி கேட்டேன் என்றால் வெள்ளோடு பாலமடையம்மன்கோவிலில் அவர்கள் வந்தபோது நான் சொன்னேன். பூசப்பன் சதாசிவத்திடம் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. ஜேம்ஸ் மற்றும் செல்வமணி கடனிற்காக தான் அக்ரிமேண்ட் எழுதி கொடுத்தார்கள் என்றால் இல்லை விற்கும் எண்ணதில் தான் எழுதி கொடுத்தனர். ஜேம்ஸ் மற்றும் செல்வமணி ஆகியோர் டீச்சராக வேலை செய்கிறார்கள், அவர்கள் ஊரில் அவர்களுக்கு நல்ல செல்வாக்கு உள்ளது என்றும், எனவே சொத்தை விற்றுத் தர அவர்கள் என்னிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல, நான் காட்டு புரோக்கராக உள்ளதால் என்னிடம் சொன்னார்கள். கடனிற்காக தான் அக்ரிமெண்ட் எழுதி கொடுக்கப்பட்டது என்று ஜேம்ஸ் மற்றும் செல்வமணி யும காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என்றும், வாதி மற்றும் அவரின் கணவர்

தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி அந்த புகாரை நீர்த்துப் போக செய்துவிட்டனர் என்றால் அந்தபுகார் பொய் புகார் ஆகும். நிருபண பத்திரிக்கை தயாரிக்க என் மகள் ஒரு வழக்கறிஞர் மூலம் ஏற்பாடு செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றும், அந்த வழக்கறிஞர் யார் என்றும், எங்குள்ளார் என்றும் என் மகளுக்கு தான் தெரியும். சதாசிவத்துடன் எனக்கு கொடுக்கல் வாங்கல் உள்ளதால் அவர் கையொப்பம் தெரியும் என்றால் இல்லை, எனக்கும் அவருக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை. செல்வமணிக்கு உடல்நிலை சரியில்லாததால் தான் பணம் கடன் வாங்கினார்கள் என்றும், அதற்குண்டான ஆதரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் எதுவுமில்லை, கடனிற்கு எழுதி கொடுத்ததும் அல்ல. நான் எனது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விவரங்கள் சதாசிவம் மற்றும் செல்விக்கு ஆதரவாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 13.11.24
Subordinate Judge,
Perundurai.

uploded by SS